# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 328/2009**

பெயர்:**அம்மாசி** நாள்: 21.01.2026

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – அம்மாசி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சியின் தொடக்க நேரம் 11:40</u>

செல்லப்பன் எனக்கு எழுதி கொடுத்ததாக சொல்லக்கூடிய பவர் பத்திரம் எந்த வருடத்தில் எழுதி கொடுத்தார் என்றால், 2008 ம் ஆண்டு தேதி, மாதம் நியாபகம் இல்லை. யார் யார் எனக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால், செல்லப்பன் மற்றும் அவருடைய மகன், மகள் எழுதிக்கொடுத்தனர் அவர்களுடைய பெயர் எனக்கு நியாபகம் இல்லை. எனக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்த சமயத்தில் செல்லப்பனின் மகன் மற்றும் மகள் வந்திருந்தார்களா என்றால், வந்திருந்தார்கள். செல்லப்பனுடன் சேர்ந்து அவருடைய மகன் மற்றும் மகள் பவர் பத்திரத்தில் கையொப்பமிட்டு எனக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால், சரிதான். பவர் பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால், இரண்டு பேர் போட்டார்கள் ஆனால் அவர்களுடைய பெயர் நியாபகம் இல்லை. பவர் பத்திரத்தை எங்கு தயார் செய்தீர்கள் என்றால், எடப்பாடி கட்டிட அலுவலகத்தில் தயார் செய்தார்கள். பவர் பத்திரத்தை தயார் செய்து என்னிடம் யார் கொடுத்தார்கள் என்றால், வெங்கடாசலம் என்பவர் கொடுத்தார். வெங்கடாசலம் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால், செட்டிப்பட்டியை சேர்ந்தவர். வெங்கடாசலம் என்ன வேலை செய்கிறார் என்றால், கட்டிட அலுவலகத்தில் வேலை செய்கிறார். பவர் பத்திரத்தை டைப் செய்தது என்றால், வெங்கடாசலம் என்பவர்தான் டைப் செய்தார். செல்லப்பன் வகையறா முதன்முதலில் யார் பெயருக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால், ஆரவல்லி பெயருக்கு எழுதிக் கொடுத்தார்கள். ஆரவல்லி யார் என்றால், என்னுடைய மனைவி ஆவார். ஆரவல்லி என்னுடன் ஒன்றாக வாழ்ந்து வருகிறார் என்றால், சரிதான். ஆரவல்லி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால், விவசாயம் செய்து வருகிறார். ஆரவல்லிக்கு என்று தனிப்பட்ட வருமானம் உள்ளதா என்றால், உள்ளது. வருடம் சுமார் 5 லட்சம் சம்பாரிப்பார்களா என்றால்,

சரிதான். ஆரவல்லி வருமான வரி கட்டிவருகிறார்களா என்றால், இல்லை. பவர் பத்திரம் வாங்கிய சமயத்தில் ஆரவல்லி செல்லப்பன் வகையறாவிற்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்றால், ரூ.1,40,000/- கொடுத்தார். ஆரவல்லி செல்லப்பன் வகையறாவிற்கு ரூ.1,40,000/- கொடுத்துதான் பவர் பத்திரம் எழுதி உள்ளதாக இருக்கிறது என்றால், ஆமாம். செல்லப்பனின் தகப்பனார் பெயர் என்ன என்றால், ஆறுமுகம் ஆகும். தாவா சொத்து செல்லப்பன் வகையறாவிற்கு எவ்வாறு பாத்தியம் என்றால், அவருடைய பூர்வீக சொத்தாகும். செல்லப்பனின் உடன் பிறந்தவர்கள் எத்தனைபேர் என்றால், ஒருவர் அவர் பெயர் ஆறுமுகம் ஆவார். செல்லப்பன் மற்றும் ஆறுமுகத்திற்கு உடன் பிறந்த சகோதரிகள் இருக்கிறார்களா என்றால், இருக்கிறார்கள். அவர்கள் பெயர் மற்றும் அவர்கள் எங்கு குடியிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. செல்லப்பன் மற்றும் அவருடைய சகோதரர் பாகப்பிரிவினை சம்பந்தமாக பத்திரம் எழுதிக்கொண்டார்களா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதிக்கொண்டது சம்பந்தமாக நான் தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. தாவா சொத்தானது காவிரி ஆற்றின் பாசன வழியாகத்தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால், சரிதான். வாய்க்கால் பாசனம் வழியாக விவசாயம் செய்வதற்கு நீர்க்கூலி கட்ட வேண்டும் என்றால், சரிதான். அதைப்போல் ஒருஒரு பட்டாதாரரும் நீர்க்கூலி கட்டினால் அதற்கு இரசீது தருவார்கள் என்றால், சரிதான். தாவா சொத்திற்கு நீர்க்கூலி கட்டியதற்கான இரசீது இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால், சமர்ப்பித்துள்ளேன். செல்லப்பன் மற்றும் அவருடைய மகன் மகளுக்கு என்ன தொழில் என்றால், விவசாயம். அவர்கள் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால், சரிதான். அவர்கள் அடிக்கடி வெளியூர் சென்று வருகிறார்கள் என்று பவர் பத்திரத்தில் எழுதி இருந்தால் தவறு என்றால், வெளியூரும் சென்று வருவார்கள். எந்த ஊருக்கு என்ன வேலை விஷயமாக சென்று வருவார்கள் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. பவர் பத்திரத்தை ஆரவல்லிக்கு எந்த விஷயம் சம்பந்தமாக எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால், கடன் வாங்குவதற்காக பவர் பத்திரம் எழுதிக்கொடுத்து கடன் கட்டவில்லை என்றால், இந்த பவர் பத்திரத்தை வைத்து என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று எழுதிக்கொடுத்துள்ளார். நான் இருக்கும் இடத்திற்கும் செல்லப்பன் இருக்கும்

இடத்திற்கும் சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால், சுமார் 50 அடி இருக்கும். தாவா சொத்தில் விவசாயம் மட்டும் தான் செல்லப்பன் செய்து வருகிறார் என்றும் வேறு எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால், தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் செல்லப்பன் மட்டும் தான் கையொப்பம் செய்திருக்கிறார் என்றால், சரிதான். ஆனால் அந்த சமயத்தில் அவருடைய மகன் மற்றும் மகள் இளவர் என்பதால் அவர்கள் கையொப்பம் செய்யவில்லை. இளவர்கள் சார்பாக செல்லப்பன் பவர் பத்திரம் எழுதிக்கொடுக்க அவருக்கு அதிகாரம் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12:05

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.01.21 16:45:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.